RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22437

# பழமொழி நானூறு வலியுறுத்தும் இல்லறம்

ஜெ. மணிகண்டன் [அ, *], சி. கண்மணி [அ]

[அ] தமிழ்த்துறை, தமிழ்வேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), தஞ்சாவூர்-613002, தமிழ்நாடு, இந்தியா

# Emphasizing the Domesticity in the Pazhamozhi Naanooru

J. Manikandan [a, *], S. Kanmani [a]

[a] Department of Tamil, Tamilavel Umamaheswaranar Karanthai Arts College, (Affiliated to Bharathidasan University, Tiruchirappalli), Tamil Nadu, India

* Corresponding Author: mmanikandanj@gmail.com

Received: 08-06-2022
Revised: 13-09-2022
Accepted: 03-10-2022
Published: 17-10-2022

Check for updates

## ABSTRACT

All the moralities are of a nature that dictates the ethics of homemaking. They express both domesticity and monasticism in different ways. Both of these are found to include the literary principles of the Tamil moralities. Some of the moralities are entitled Power and record songs for homelessness and apostasy. Among these, Thirukkural, Naladiyar and Pazhamozhi Naanooru can be mentioned. They divided into 34 sections in four categories on the subject of 'Pazhamozhi Naanooru' published in 1948 by the Kazhaga Veliyeedu. This article treatise only 9 songs from the book "Ilvazhkai" in the entitled Pathinenkilkanakku Noolkal Moolamum Uraiyum.

**Keywords:** Pazhamozhi Naanooru, Moral, Literary Principles, Ilvazhkai

## முன்னுரை

தொன்று தொட்டு வழங்கிவரும் மூது ரைகள் பழ மொழி எனப்படும். ஓரினத்தின் மேதைமை, நுண்ணறிவு, உணர்வுகள் என்பனவற்றைப் பல்லாண்டுகளாகப் பயின்று வரும் பழமொழிகள் உலகில் வழங்கி வருகின்றன. முதுமொழி, மூதுரை, பழமொழி என்பன ஒரு பொருட்பன்மொழி ஆகும். பழமொழி நானூறு பாடல்கள் எந்தவித வகைப்பாடுமின்றிதான் மூலப்பிரதிகளில் அமைந்திருந்தன. ஆகையால் தமிழ்ச் சான்றோர்கள் சுப்பராயச் செட்டியார் மற்றும் தி. செல்வக்கேசவராய முதலியார் போன்றவர்களால் அரிதின் முயன்று, பொருளடிப்படையில் நான்கு பகுப்புகளில் 34 பகுதிகளாகப் பிரித்து 1948இல் கழக வெளியீடாக வெளிவந்துள்ளது (Christhumani, 2011). இவற்றைப் பின்வரும் நான்கு பகுதிகளில் பகுத்துக்காட்டப்பட்டுள்ளது. (1) அறம் சார்ந்தவை - 8 பகுதிகளில் 99 பாடல்களும், (2) மன்னரைச் சார்ந்தவை - 5 பகுதிகளில் 86 பாடல்களும், (3) ஊழ் (பழவினை) - 1 பகுதியில் 14 பாடல்களும் (4) பொது ஆளுமைச் சார்ந்தவை - 20 பகுதிகளில் 200 பாடல்களும், கடவுள் வணக்கம் 1 பாடலும், ஆகக் கூடுதல் 400 பாடல்களைக் கொண்டிருக்கிறது பழமொழி நானூறு.

அறம், பொருள் என்ற வரையறைப்படி முறையாக அமையாது கல்வி, கல்லாதார், அவையறிதல், அறிவுடைமை போன்ற பொருள்சார் பகுதிகளில் தொடங்கி, ஒழுக்கம், இன்னா செய்யாமை என்ற அறம்சார் பகுதிகளில் சென்று, பின்னர் புகழ்தலின் கூறுபாடு தொடங்கி நன்றியில் செல்வம் வரை பொருள்சார் பகுதிகள் அமைந்துள்ளன. இடையே ஊழ் என்ற பகுதியும், இதன்பின்னர் அரசியல்பு பகுதி தொடங்கி படைவீரர் வரை அமைந்துள்ளன. இறுதியில் இல்வாழ்க்கை, உறவினர், அறம் செய்தல், ஈகை, வீட்டுநெறி போன்ற அறம்சார்ந்த பகுதிகளில் முடிகின்றன.

அறம் சார்ந்த மொத்தம் 99 பாடல்களும் பின்வரும் எட்டு பிரிவுகளில் அடங்கியுள்ளன. அவை (1) இன்னா செய்யாமை, (2) உறவினர், (3) ஒழுக்கம் முறையே ஒன்பது பாடல்கள் வீதமும், (4) அறம் செய்தல், (5) ஈகை பற்றியன முறையே 15 பாடல்கள் வீதமும், (6) இன்னா செய்யாமை பற்றியன 8 பாடல்களும், (7) வீட்டுநெறி பற்றியன 13 பாடல்களும், (8) இல்வாழ்க்கை பற்றியன 21 பாடல்களுமாகும். இல்வாழ்க்கை எனும் பிரிவினின்று அதாவது 328-334 336-337 ஆகிய 9 பாடல்கள் மட்டும் எடுத்துக் கொண்டு ஆய்வுக்கட்டுரை விரிவஞ்சி ஆய்வாளர் தம் திறன் வரையறையாகக் கொள்ளப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கை என்பது ஆணும் பெண்ணும் மணமுடித்துக் கொண்டு, இணைந்து வாழும் வாழ்க்கை ஆகும். இதனைக் குடும்ப வாழ்க்கை என்றும் மனை வாழ்க்கை என்றும் கூறுவர். ஓர் இல்லத்தின் கண்ணே கணவனும் மனைவியும் உரிய நெறிமுறைகளுடன் வாழும் இந்த வாழ்க்கையை இல்லறம் என்றே குறிப்பிட்டனர். இல்லறம், துறவறம் என்ற இருவகையில் மக்கள் வாழ்க்கை பழங்கால முதல் தொடர்ந்து வருகின்றது. இவற்றுள் இல்லறமே சிறந்ததென்றும் 'கோட்பாடு' பண்டை நாள் முதல் பின்பற்றப்படுகின்றது. "இல்லறமல்லது நல்லறமில்லை" என்பது அவ்வையார் வாக்கு. அக்காலப் புலவர் தம் பாடல்களில் இதனையே அடிப்படையாகக் கொண்டு பாடியும் வந்துள்ளனர். தமிழ் அறநூல்கள் அனைத்தும் இல்லறம், துறவறம் என்ற இரண்டு நெறிமுறைகளையும் பேசுகின்றன. இவை இல்லிருந்து அறநெறியுடன் வாழும் இல்வாழ்க்கை அறத்தையே பெருமைப்படுத்துகின்றன.

திருக்குறள், நாலடியார் போன்ற கீழ்க்கணக்கு நூல்கள் இவ்வழியைப் பின்பற்றிப் பேசுகின்றன. இக்கட்டுரை ஆய்விற்கு நாலடியார் கூறும் இல்வாழ்க்கை அறநெறிக் கூறுகள் இம்முறையில் அமைந்துள்ள போக்குகள் தரவுகளாக எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன. இல்வாழ்க்கை அறத்துடன் நெருங்கிய தொடர்புடையதாம். அறவழிபட்டதே இல்வாழ்க்கை என்ற தனித்தன்மையை உணர்ந்த வள்ளுவர், 'அறன் வலியுறுத்தல்' என்பதற்கு அடுத்ததாக 'இல்வாழ்க்கை'யை வைத்தார் என்பர் புலவோர். பரிமேலழகரும் இதனை, "இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு. இந்நிலை அறஞ்செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலாகலின் இஃது அறன்வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டது" என்கிறார் (Parimelazhakar, 2015).

எனவே ஆணும் பெண்ணும் இயற்கையாகச் சேர்ந்து இயல்பாக வாழ்வது மட்டுமன்று. செயற்கையாகச் சமூகத்தில் காணப்படும் அறச்செயல்கள் முற்றாக இணைந்திட இயங்குவதே இல்வாழ்க்கை என்ற ஒப்புதலுக்கு வரலாம். இல்லறத்தில் இணையர் இருவரில் பெண் மக்களைச் சிறப்பிக்கும் போக்குப் பண்டை நாளிலிருந்து பின்பற்றப்படுகின்றது. குறிப்பாகப் பிற்கால நூல்களாகிய நீதிநூல்கள் அனைத்தும் இல்லாளின் (wife) சிறப்பைப் பெரிதாகக் குறிப்பிடுகின்றன. திருக்குறள்,

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை"

என்கிறது. இது கற்புடைய மனைவியின் ஆற்றலைக் குறிப்பிடுகின்றது. இக்குறட்பாவிற்கு, "தெய்வத்தைத் தொழாதபோதும், கணவனையே தெய்வமாகத் தொழுது காலையில் எழுகின்றவள் மழையைப் பெய்யென்று சொல்ல அது பெய்யும் என்று கூறப்படுகிறது". திரிகடுகம் மனைவியைப் பல்வேறு சான்றோர்களின் பண்பிற்கு ஒப்பிடுகின்றது (Subramaniyam Pillai, 2012).

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன

செய்வகைச் செய்வான் தவசி கொடிதொரீஇ

நல்லவை செய்வான் அரசன் இம்மூவர்

பெய்யெனப் பெய்யும் மழை" (Manickavasagar, 2019)

என்பது பாடல். இதனை விளக்கும் உரையாசிரியர், "அதாவது கணவன் குறிப்பறிந்து நடக்கும் மனைவி, தவஒழுக்கம் குன்றாத துறவி, குடிமக்களைக் காக்கின்ற அரசன் இம்மூவர், பெய் என்றால் மழைபெய்யும் மழை என்ற கருத்து நல்ல மனைவியை ஒரு தவசிக்கும், நாடாளும் மன்னனுக்கும்

இணையாக வைத்துச் சொல்லியிருப்பது நூலாசிரியரின் பெண்மை போற்றும் பண்பிற்கு அடையாளம் ஆகிறது" என்றெழுதுகிறார் (Manickavasakar, 2019).

வள்ளுவரின் நோக்கும் திரிகடுக ஆசிரியரின் 'நோக்கும்' ஒன்றேயாயினும் சொல்லப்பட்ட போக்கு மட்டும் வேறுபட்டுள்ளது. இது காலச்சூழல் என்று கூறலாம். இச்செய்யுட்கு 'மாமழை போன்றோர் இம்மூவர்' என தலைப்பிடப்பட்டதும் அறியத்தக்கது.

வாழ்க்கைத்துணை நலம் சிறப்பாக அமைந்து இல்லறம் சிறப்புற இயங்குவதற்கு முதன்மை தருகிறது சமூகம். இல்லறத்தில் மனைவியின் சிறப்புக் குணங்களைப் 'பழமொழி நானூறு' என்ற நூல் வழங்குமாற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இக்கட்டுரை பின்வரும் ஏழு கூறுகளில் பிரித்தமைக்கப்படுகின்றது. 1. பெண்மைக்குணம்,2. இல்லறத்தில் மனைவியும் அவள் விருப்பமும், 3. மனையாளின் நற்குணங்கள், 4. புதல்வரை வளர்க்கும் பண்பு, 5. கணவன் மனைவி வாழ்வியல் சிக்கல்கள், 6. இல்லறப் பெண்களின் தோற்றம், 7. பிறன்மனை நயவாமையும் நிறைகாத்தலும்.

## பெண்மைக்குணம்

பெண்களின் வாழ்வியல் முறையை அவர்களின் பண்புகளுடன் நீதி நூல்கள் இணைத்துப் பார்க்கின்றன. அதில் இல்லறப் பெண்களுக்குரிய பண்புகளாக அவை வரையறுக்கின்றன. பழமொழி நானூற்றில் இல்லக்கிழத்திற்குரிய பொதுப் பண்புகள் சிலவற்றைக் கூறுகின்றது. இந்நூலில் இல்லறம் பற்றிக் கூறப்படும் ஒன்பது செய்யுட்களும் மனைவியர் பற்றிய சிறப்புகளையே இந்நூல் விளக்கிச் செல்கின்றது. அகநூல்களில் பெண்களின் வாழ்க்கையைக் களவு, கற்பு என்னும் இருபகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரு பகுதியிலும் பெண்கள் பாலியல் உணர்வுகளும் அவை சார்ந்த ஒழுக்கங்களும் பேசப்படுகின்றன. தொல்காப்பியம் இல்லறப் பெண்கள் நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று பண்புகளை குறிப்பிடுகின்றது. அவை அச்சம், அறியாமை, நாணம் என்று வழங்கப்படுகின்றன.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"

என்பது தொல்காப்பியம். இதன்கண்ணுள்ள 'நாணம்' என்ற பண்பைப் பழமொழி நானூறு பற்பல எடுத்துக்காட்டுகளைக் கூறி, இல்லறப் பெண்களுக்கு அப்பண்பு தேவை என்பதை வலியுறுத்துகின்றது. தொல்காப்பியம் 'களவியலில்' தலைமகட்கு உரியதோர் இலக்கணங்கூறி, அச்சம், நாணம், பேதைமை இம்மூன்றும் நாள்தோறும் முற்படுதல் பெண்ணிற்கு இயல்பு என்று விளக்குகிறது (Ilampooranar, 2005). இதிற் கூறப்படும் 'நாணம்' என்பது குறித்த அறத்தன்மையைப் பழமொழி நானூறு,

"நாணின்றி ஆகாது பெண்மை நயமிகு

ஊணின்றி ஆகாது உயிர்வாழ்க்கை - பேணுங்கால்

கைத்தின்றி ஆகா கருமங்கள் காரிகையாய்

வித்தின்றிச் சம்பிரத மில்"

எனக் கூறுகின்றது. நாணம் என்பதற்குக் கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி 'அச்சம், அடக்கம், மதிப்பு, வெட்கம், இது மகடூஉக் குணம் நான்கில் ஒன்று' எனப் பொருள் கூறுகின்றது (Gowmareeshwari, 2003). நாணம், நாண் என்பன ஒரு பொருளன. வழக்கில் கூறப்படும் நாணம் என்ற சொல்லின் இறுதி கெட்டு 'நாண்' என நின்றது. இத்தகைய பண்பின்றிப் பெண்மைக் குணம் அமையாது என்பது கருத்து. "நாணுடைமை" 102 ஆம் அதிகாரத்திற்கு விளக்கம் எழுதும் பரிமேலழகர் நாணம் என்பதனால் உண்டாகும் உணர்வின் அடிப்படையை விளக்குகின்றார். அவர், "சால்பு, பண்பு முதலிய குணங்களால் நமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல் உடையரார் தன்மை என்றும், மனம், மொழி

என்பவற்றின் அடக்கத்தால் வருவன. பெண்களுக்குரிய நாணம்" என்றும் விளக்கியுள்ளார் (Parimelazhakar, 2015).

இத்தகைய நாணம் என்ற பண்பு இல்லறப் பெண்களுக்கு மேன்மையை உண்டாக்குகிறது என்பது பழமொழி நானூறு தரும் முடிபாம். அஃதாவது நாணமில்லாமல் பெண்களால் இல்லறத்தை மேற்கொள்ள இயலாது என்பது கருத்து.

## இல்லறத்தில் மனைவியும் அவள் விருப்பமும்

மனைவியர் எல்லோரும் பற்றுடையவர்களே. இந்தப் பற்றுதல் அளவோடு அமைதல் வேண்டும் என்று பழமொழி நானூறு கூறுகின்றது. எதிலும் மிகுபற்றுக் கூடாதென்பது பொதுநெறி. "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்" என்பது 'தமிழ்நாட்டுப் பழமொழி' (1967:4). இதனை,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்

அதனின் அதனின் இலன்"

என்ற திருக்குறளும் பற்றுமிகுதியான் வருந்துன்பத்தையும் அளவுடைய பற்றினால் கிடைக்கும் இன்பத்தையும் குறிக்கின்றது (Parimelazhakar, 2015). இதே அடிப்படையில் இல்லறத்தில் ஆண்-பெண் அன்பு செலுத்துதலையும் பழமொழி நானூறு பின்வருமாறு விளக்குகின்றது.

"உரிதனில் தம்மோடு உழந்தமை கண்டு

பிரிவின்றிப் போற்றப் படுவார் - திரிவின்றித்

தாம்பெற் றதனால் உவவார் பெரிதகழின்

பாம்புகாண் பாரும் உடைத்து"

என்பது செய்யுள் (Parimelazhakar, 2015). இதன்கண் மனைவியானவள் தாம் பெற்ற உரிமையினால் (Possession) கணவனை அளவோடு அன்பு செலுத்தி அவனைத் தற்கொள்ளவேண்டும். அவ்வாறின்றி முழுவதுமாகத் தம் அன்பிற்கு அடைக்கலமாக வைக்கத் தொடங்குதல் தீமையில் கொண்டு செலுத்தும். எனவே மனைவி கணவன் மீது செலுத்தும் அன்பு ஓர் அளவில் அறநெறிப்பட்டதாய் அமைய வேண்டும் என்பது கருத்து. இச்செய்யுளின் இறுதியில் குறிப்பிடப்படும் பழமொழி, பாம்புக்குழியை ஆழமாகத் தோண்டப் பாம்பே தோன்றி தீமை என்பதாகும். இப்பழமொழி பண்டை வழக்கு. மேற்குறித்த செய்யுட்குத் தரப்பட்டுள்ள தலைப்பு 'பெற்ற அளவால் மகிழ்க' என்று மனைவிக்குச் சொல்லப்பட்டதாக அமைந்துள்ளது.

எல்லைமீறிய அன்பு கட்டுக்கடங்காத உணர்வாக மாறிப்போதலைப் பாரதியாரின் "கண்ணம்மா என் குழந்தை" என்ற பாடற்பகுதியில் காணமுடிகிறது. கண்ணம்மா என்ற தன் மகளை எண்ணும் போது தோன்றும் அளவிலா உணர்வுகளை வெளிப்படுத்துகிறார். இதனால் தான் திருவள்ளுவர், மனைவியர் செயற்பாட்டினை,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என வரையறுக்கிறார் (Bharathiyar, 2001). இதற்குத் தன்னையும் நெறிவழுவாது பாதுகாத்துத் தன் கணவனையும் போற்றி நலம் நிறைந்த (குடிப்) புகழைப் பேணித் தன் கடமைகளைச் செய்வதில் மறதியுந் தளர்வுமில்லாதவளே பெண் என்று சிறப்பித்துக் கூறப்படுபவள் என உரை கூறப்பட்டுள்ளதன்வழி உணரமுடிகிறது (Subramaniyam Pillai, 2012).

## மனையாளின் நற்குணங்கள்

பழைய மரபில் கணவனே கண்கண்ட தெய்வம் என்றும், கணவன் இறப்பின் மனைவியும் உயிர்துறப்பாள் என்றும் பாலியல் ரீதியான நடத்தைகளில் கணவன் ஈடுபடினும் அதற்காகக் கணவனை மறுதலித்தல் மனைவிக்கு அழகன்று (நற்பண்பன்று) என்றும் கூறப்பட்டன. பிற்காலத்தில் திருக்குறள் உள்ளிட்ட நீதிநூல்கள் மனைவியின் செயல்களில் உன்னதப் பண்பு அமைந்திருத்தலையே வற்புறுத்துகின்றன. மனைவி புகழ் நிறைந்த குணத்தோடு அமைதலைத் திருக்குறள்,

"புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை"

என்ற குறள்வழி நாட்டுகின்றது. அஃதாவது உலகத்தார் "கற்பினால் வரும் புகழினை விரும்பி நடக்கும் மனையாள் இல்லாதவர்க்குத் தம்மை இகழ்ந்து பேசும் பகைவர் முன்னே ஆண் சிங்கம் போல நடக்கும் பெருமித நடை இல்லை" என்பது கருத்து (Subramaniyam Pillai, 2012).

சிலப்பதிகாரத்தில் தான் அமர்ந்திருந்த அரியணையிலிருந்து வீழ்ந்து இறந்த சேரன் செங்குட்டுவனின் மனைவியாகிய கோப்பெருந்தேவி தானும் மயங்கி வீழ்ந்திறந்தாள் என்ப. அப்போது அவள் கூறியதையும் சிலப்பதிகாரம் வருந்திக் கூறுகின்றது.

"கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்

கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லென்

றிணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி"

எனவரும் மதுரைக் காண்டம், வழக்குரை காதையால் உணரலாம். கணவனுக்காக உயிர்துறந்த கோப்பெருந்தேவியின் நற்குணங்களில் அடங்காது அது சமூகச்சூழல். நற்குணம் என்பது கணவனுடன் வாழுங்காலத்தில் அவன் குறிப்பறிந்து பணிபுரியும் பண்பாகும் (Subramaniyam Pillai, 2012). அத்தகைய குணங்களைத் தனியே பிரித்துக் கூறுகிறது 'பழமொழி நானூறு'.

"சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பில்தம்

இல்லாளே வந்த விருந்தோம்பிச் - செல்வத்

திடநின்றி தஏமாந் திருந்தாரே நாளும்

கடலுள் துலாம்பண்ணினார்"

எனக் 'கணவன் சொல்லாமலே அவன் எண்ணத்தைக் குறிப்பால் உணர்ந்து நடந்துகொள்ளல் மனைவிக்கு உரிய நற்குணங்களில் ஒன்றாகப்' பழமொழி நானூறு அறிவுறுத்துகின்றது. மேலும் வந்த விருந்தினரைக் குறைவின்றி வரவேற்று மகிழ்வித்த மனைவி பண்புகளுள் அடங்குவதாகவும் குறிக்கப்படுகின்றது. இத்தகைய பெண்களுக்குச் செல்வக் குறை இருக்காதென்றும் இச்செய்யுள் சுட்டிக்காட்டுகிறது. இதனை வள்ளுவம் 'மனைத்தக்க மாண்பு' என்கிறது (Parimelazhakar, 2015).

மனைவியின் நற்குணங்களைத் திருக்குறளின்வழி (எடுத்துரைக்கும் பரிமேலழகர், "மனைவியின் நற்குணங்களாவன துறந்தார்ப் பேணலும் விருந்து அயர்தலும் வறியார்மாட்டு அருளுடைமையும் முதலாயின. நற்செயல்களாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டில் தொழில் வன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது முதலை அறிந்து அதற்கு இயைய அழித்தல். இதனால் இவ்விரண்டு நன்மையும் சிந்தனை என்பது கூறப்பட்டது" என்கிறார் (Parimelazhakar, 2015). கணவன் எண்ணத்தைக் குறிப்பால் அறிதலைப் பெண்களின் (மனைவி) அருங்குணமாகக் கூறினாலும் ஏனைய நீதிநூல்கள் மேலும் பலவற்றை எடுத்துரைக்கின்றன. இத்துணைப் பெருங்குணங்களோடு இல்லறப் பெண்கள் கணவனோடு இணைந்து வாழ்தல் வேண்டும் என்பது அறநெறி வலியுறுத்தலாகும்.

## புதல்வரை வளர்க்கும் பண்பு

இல்லறப் பெண்களின் நற்குணப் பண்புகளுள் தாம் பெற்றெடுத்தல் பிள்ளைகளைப் பண்புகள் நிறைய வளர்ப்பதும் ஒன்றென்கிறது பழமொழி நானூறு. தாயின் கடமை தனித்த சிறப்புடையது. இதுபோலவே பிள்ளை வளர்ப்பில் தந்தைக்கும் பொறுப்புணர்ச்சி உள்ளதையும் இந்நூல் விளக்கிச் செல்கின்றது. திருக்குறள் புதல்வரைப் பெறுதலில் தாய், தந்தை இருவர்க்கும் உள்ள கடமைகளை விளக்குகின்றது. புதல்வரைப் பெறுதல் என்பது ஆண் மக்கள், பெண் மக்கள் என இருவருக்கும் என்பதற்கு உரிய காரணங்களைப் பரிமேலழகர் 'புதல்வரைப் பெறுதல்' என்ற அதிகாரம்-7 முகப்பிலேயே விளக்குகின்றார். "அஃதாவது, இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படூஉம் கடன் மூன்றனுள் முனிவர்கள் கேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின், அக்கடன் இறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல், அதிகார முறைமை மேலே பெறப்பட்டது" என்பது அவருடைய கருத்து (Parimelazhakar, 2015).

பின்னரும் புதல்வர்களை 'மக்கள்' எனப் பொதுப் பெயரான் அழைத்தது, பெண் நீக்கி நின்றது என்றும் சுட்டியுள்ளார் (Saminatha Iyer, 1971). இது மட்டுமின்றிப் பொதுவாகத் தந்தையைச் சுட்டித் தாயை நீக்கிக் கூறுவதும் இலக்கிய வழக்காம்.

கோவலனைப் பாண்டியனிடம் சுட்டும் கண்ணகி, மாசாத்துவனின் மகனாகிய கோவலன் என்கிறாள்.

"ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி

மாசாத்து வாணிகன் மகனை யாகி"

என்ற கூற்று எண்ணத்தக்கது (Saminatha Iyer, 1971). இவ்விடத்துத் தாயைக் குறியாது மாசாத்துவணிகன் என்று தந்தை பெயர் சுட்டியிருப்பதனைக் காணலாம். பழமொழி நானூற்றில் தந்தையின் கடமை சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. தன்னுடைய பிள்ளையைத் தந்தையானவன் அறிவிற் சிறந்தவனாய் வளர்த்திட வேண்டும் என்கிறது இந்நூல். அவ்வாறு வளர்த்தால் அப்பிள்ளை வளர்த்த தந்தைக்கே தெய்வம் போலத் திகழ்வான். இதனை,

"எந்நெறி யானும் இறைவன்தன் மக்களைச்

செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும் - அந்நெறி

மான்சேர்ந்த நோக்கினாய்! ஆங்க வணங்காகும்

தான்செய்த பாவை தனக்கு"

என்ற பாடலுக்கு கருத்துரைக்கும் உரையாசிரியர் குழு, "தந்தை தன் புதல்வரை எல்லா விதத்தாலும் நல்வழியில் நிற்கும் வகை அறிவுண்டாகச் செய்தல் வேண்டும் (Subramaniyam Pillai, 2012). தான் அமைத்த அர்ச்சா விக்கிரகம் அமைத்த தனக்கே தெய்வமாகும். மக்களைச் செந்நெறியில் நிற்பச் செய்தல் அதுபோலும் அத்தந்தை தனக்கு" எனக் குறிப்பிடுகின்றது. செந்நெறியில் வளர்க்கப்பட்ட பிள்ளைக்குத் தந்தையும் தெய்வமாகத் தோன்றுவான் என்பது கருத்து.

கடமை உணர்வோடு வாழ்ந்தவர் பழந்தமிழ்க்குடியினர் ஆவர். அப்பழந்தமிழ் இலக்கியத்தில் "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" எனவும் கூறப்பட்டுள்ளதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இதற்கு உரை விளக்கம் எழுதும் உ.வே.சா., "தன் குலத்துக்குரிய படைக்கலப் பயிற்சியாகிய கல்வி, அதற்குரிய செய்கைகள் ஆகிய இவற்றால் நிறைந்தவனாகச் செய்தல் தகப்பனுக்குக் கடமையாம்" என்றெழுதுகிறார் (Saminatha Iyer, 1971). இதனையே வள்ளுவமும்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து

முந்தி யிருப்பச் செயல்"

என்று தந்தையின் கடமையைக் குறிப்பிடுகின்றது. கற்றார் இருக்கும் அவையின்கண் தன் மகன் முதன்மையாயிருக்கும்படித் தோன்றச் செய்வதே மகனுக்குத் தந்தை செய்யும் நன்மை ஆகும் என்பது

கருத்து. தன் மகன் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக் கேட்கும் தாயும் மகன் தன் தந்தைக்குச் செய்யும் உதவி (கைம்மாறானது) யாது எனில், மகனின் கல்வியறிவொழுக்கங்களைக் கண்டோர் "இவன் தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவஞ் செய்திருப்பானோ என்று சொல்லுஞ் சொல்லும்" மகனுக்குப் பெற்றோர் செய்யும் சிறப்பு நலம் புலப்படுகிறது (Subramaniyam Pillai, 2012).

இவ்வாறு தந்தை கூறும் அறிவுரையையும் அவர் காட்டும் நன்னெறிகளையும் பின்பற்றாதவன் தனக்குத் தானே தீமை தேடிக்கொள்கிறான் என்பதை,

"கல்லென்று தந்தை கழற அதனைஓர்

சொல்லென்று கொள்ளாது இகழ்ந்தவன் - மெல்ல

எழுத்தோலை பல்லார்முன் நீட்ட விளியா

விழுக்கோலைக் கொண்டு விடும்"

நாலடியார் தந்தை சொல் கேளாத மகனுக்கும் அறிவுரை கூறுகின்றது (Tamizhppriyan, 2012). இதனால் "தந்தை எவ்வழி புதல்வன் அவ்வழி" என்று மூத்தோர் கூறலாயினர். இறைவனைத் தந்தையாக்கிப் பாடும் இராமலிங்க அடிகள் கற்க விரும்பும் மகனைத் தடுக்கும் தந்தையைச் சிறு கதையிலும் கேட்டதில்லை என்கிறார் (Uranadigal, 1989). இதனாலும் பிள்ளை வளர்ப்பில் தந்தையின் பொறுப்பும் கடமையும் கூறப்பட்டன. பிள்ளையைப் பெற்று வளர்க்கும் பொறுப்பில் தந்தையை,

"ஒக்கும் வகையான் உடன்பொருள் சூதின்கண்

பக்கத் தொருவன் ஒருவன்பாற் பட்டிருக்கும்

மிக்க சிறப்பின ராயினும் தாயர்க்கு

மக்களுள் பக்கமோ வேறு"

என்று பழமொழி நானூறு குறிப்பிடுகிறது. இப்பாடலுக்கு, "தம்முள் ஒக்கும் வகையான் சிலருடனே பொருதலான் ஆதின்கண் பக்கத்திலிருந்தவன் ஒருவன் ஒருவனிடம் அன்பு பொருந்திப் போர் செய்யும் விதத்தைக் காட்டுவான். அதுபோலத் தம் புதல்வர் எல்லார்க்கும் தக்கத் தாயாகச் சிறந்தார். ஆயினும் தாயர்க்கும் புதல்வருள் சிலர் பக்கத்தே கண்ணோட்டத்தில் வேறுபாடுளதாம்" என உரை எழுதுகின்றது உரையாசிரியர்குழு. தாய் ஒரு புதல்வன்மீது மிகுந்த கவனம் கொண்டிருப்பதற்கான காரணத்தை இப்பாடல் விளக்கவில்லை (Gowmareeshwari, 2009). ஆயினும் கல்வி, புகழ், பெற்றோரைப் போற்றல் முதலானவற்றால் சிறப்படையும் புதல்வரைத் தாய் அருகமைத்துக் கொள்வதாகப் பொருள் கொள்ளலாம்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவில் கல்விச் சிறப்புத் தனித்து நிற்பது பதிவாகியுள்ளது. குறிப்பாகப் புறநானூறு இதனை,

"பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்

சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்"

எனச் செப்புகின்றது. இதனை விளக்கும் உ.வே.சா., "பிறப்பு ஒரு தன்மையாகிய ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயின் மனம் வேறுபடும்" என்கிறார் (Saminatha Iyer, 1971). தாய் தம்மக்களைப் போற்றற்குரிய சிறப்புக்களில் கல்வியும் ஒன்று என்பது தெளிவாகிறது.

## கணவன் மனைவி வாழ்வியல் சிக்கல்கள்

இல்லற வாழ்வு இருபாலர் அன்பின் விளைவாக அமைவது 'இல்லறம் அல்லது நல்லறமன்று' என்பது மூத்தோர் வாக்கு (Gowmareeshwari, 2003). பண்டைக்கால முதல் இற்றைநாள் வரையில் கணவன்-மனைவி ஒத்து வாழ்வதே நல்ல இல்லறம் என்று கூறும் போக்குத் தொடர்கிறது. பண்டை நாளில்

இல்லறத்தில் இருக்கும் ஆண்கள் சில சூழ்நிலைகளில் பிற பெண்களின் பால் உறவு கொள்வது மரபாக இருந்துள்ளது. இத்தகைய வேறுபாட்டால் மனைவி மனம் கலங்குவதும் அதனைத் தீர்த்து வைக்கப் பெரியோர்கள் முயல்வதும் சிக்கல் தீர்ந்து கணவனும் மனைவியும் வாழ்வதும் சமூகத்தில் காணப்பட்ட ஒன்று. சிக்கலைத் தீர்த்து வைக்க அந்தணர், பாணர், பாங்கன், தோழி முதலியோர் ஈடுபட்ட நிகழ்வுகள் பலவும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. தலைவியைப் பிரிந்து தலைவன் பரத்தையர் இல்லத்தில் தங்கி இருப்பதைப் 'பரத்தையர் பிரிவு' என்று அகத்துறை இலக்கணம் கூறுகின்றது.

இத்தகைய பரத்தையர் பிரிவொன்றில் தலைவனின் மனைவியைக் கண்டு தலைவன் நிலையை எடுத்துரைத்து சிக்கலைத் தீர்த்திடப் பாணன் வருகிறான். பாணனிடம் தலைவனைப் பற்றித் தலைவி தம் எண்ணத்தை எடுத்துக் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. 'பாணர்' என்போர் வாய்ப் பாடலாக இசைப்பாடல் பாடிச் சென்று இத்தகையக் குடும்பச் சிக்கலைத் தீர்க்கின்றவர்களாகவும் இருக்கின்றனர் (Gowmareeshwari, 2003). இவர்களை, "சங்கீதம் பாடிப் புகழ்வோர், தையற்காரர்" எனக் 'கதிரைவேற்பிள்ளைத் தமிழ்மொழி அகராதி' பொருள் கூறுகிறது. தம்மிடம் தலைவனின் தூதாக வந்த (வாயிலாக)ப் பாணனிடம்,

"தொடித்தோள் மடவார் மருமந்தன் ஆகம்

மடுத்துஅவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப

நெறிஅல்ல சொல்லல்நீ பாண! அறிதுயில்

ஆர்க்கும் எழுப்பல் அரிது"

என்கிறாள். இது தலைவனை மறுத்துக் கூறும் தலைவியின் வாயிலாக அமைகின்றது. "தொடியணிந்த தோளினை உடையாராகிய மடவாருடைய மருமம் (ஆகம்) தன்னுடைய மார்பிலே மடுப்ப, அவருடைய மார்பிலே மகிழ்நன் தான் மடுப்ப நிகழ்ந்த ஒன்றை நெறியல்லவென்று சொல்லாதொழிவாயாக பாணனே! பொய்யுறக்கம் உறங்கு வாரை எழுப்ப யாவர்க்கும் அரிது. அதுபோலும் நீ சொல்லும் வார்த்தை எங்களுக்கு" என்பது உரையாசிரியர்குழு கூறுகிறது.

## இல்லறப் பெண்கள் - தோற்றம்

இல்லறப் பெண்கள் நற்குணங்களைப் பெற்றிருத்தல் போலவே தோற்றத்திலும் தம்மைப் பொலிவுடையவர்களாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று பழமொழி நானூறு கூறுகிறது. பிற நீதிகளில் இத்தகைய குறிப்புக் காணப்படவில்லை. சங்க இலக்கியங்களில் கூட, பெண்கள் தோற்றப் பொலிவு விளக்கப்பட்டுள்ளதே தவிர, நீதியாக, அறிவுரையாக, ஏதும் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. எனினும் இல்லறப் பெண்களும் பிறரும் வருணிக்கப்பட்டுள்ளனர். நீதிநூல்கள், அறநூல்கள் வருணிப்பைத் தவிர்த்தே உள்ளன. திருக்குறள் காமத்துப் பாடலில் பெண்களின் தோற்றப் பொலிவைக் குறட்பாவாக (ஆகுபெயர், அன்மொழித் தொகை) எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தற்காத்தல், கொண்டானைப் பேணல், சொல்காத்தல், சோர்வில்லாதிருத்தல் ஆகியன செயல்களாக அமைந்துள்ளது எண்ணத்தக்கது. பழமொழி நானூறு பெண்கள் தோற்றப் பொலிவினை,

"அகத்தால் அழிவு பெரிதாயக் கண்ணும்

புறத்தால் பொலிவுறல் வேண்டும் எனைத்தும்

படுக்கை இலராய்க் கண்ணும் உடுத்தாரை

உண்டி வினவுவார் இல்"

எனக் கூறுகின்றது (Subramaniyam Pillai, 2012). படுத்துறங்குவதற்கு நல்ல (படுக்கை) பாய் (bed) இல்லாத போதும் தாம் உடுத்த உடையால் பொலிவுடன் தோன்றும் பெண்களை வறுமையில் வாடுவார் என எண்ணி, உணவு உண்டிரோ எனக் கேட்பாரில்லை. தம் வீட்டிலுள்ள வறுமை பெரிதாயினவிடத்தும் எந்த விதத்தானும் புறத்தால் காணத் தம்முடைய மேனி பொலிவு (தோற்றம்) பெற்றிருத்தலைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது மேற்கண்ட பாடல்.

## பிறன்மனை நயவாமையும் நிறைகாத்தலும்

நயவாமையும் நிறைகாத்தலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூறிய அறப்பண்புகள். பிறன்மனை நயவாமை ஆண்களுக்குரியது. பிறனுடைய மனைவியை விரும்பாமை என்று இதற்குரிய பொருளாகும். இஃது ஒரு பாவச் செயலாகவே கருதப்பெறும். அறநூல் தலையாயதாகக் கருதப்பெறும் திருக்குறள்,

"பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"

எனக் குறிப்பிடுகின்றது (Parimelazhakar, 2015). "அஃதாவது காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது ஒழுக்கம் உடையார்மாட்டே நிகழ்வதாதலின், 'ஒழுக்கம் உடைமை'யின் பின் வைக்கப்பட்டது" (Athikaram 15) என்கிறார் பரிமேலழகர். பிறர்மனையில் 'தமியராய்ப் புகாமை' என்னும் தலைப்பில் அமைந்த பழமொழி நானூறு வெண்பா, பிறன்மனை நயவாமையை வலியுறுத்துகிறது.

"தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்தும்

தாமே தமியர் புகல்வேண்டா - தீமையான்

ஊர்மினின் இல்லை கரியோ ஒலித்துடன்

நீர்மிகின் இல்லைச் சிறை"

என்பது பாடல். உற்ற நண்பர்கள் இல்லமாயினும் தூய்மையான மனத்தவர் தனியே தங்குதல் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்பாடலில் அமைந்த பழமொழியாகிய "நீர்மிகின் இல்லைச் சிறை" எனும் முன்றுறையரையனார் கூறியதற்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட புறநானூற்றில் "நீர்மிகிற் சிறையும் இல்லை" என்றும்,

"காப்புடை யுள்ளங் கனற்று பவரே

செருப்பிடைப் பட்ட பால்"

என்ற பழமொழி நானூறு பாடலுக்குச் "செருப்பிடைச் சிறுபரல் அன்னன்" என்பதாலும் பழமொழிகளின் தொன்மை புலப்படுகின்றது (Christhumani, 2011).

பெண்கள் தம் கற்பைக் காத்து ஒழுகுதல் வேண்டும் என்பது நிறைகாத்தலாம். நிறை-கற்பு. இது ஒழுக்கம் சார்ந்தது, இவ்வொழுக்கமே பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களில் தலைசிறந்தது என்பதை எல்லோரும் அறிவர். அறநூல்கள் இதனையும் வற்புறுத்துகின்றன. "மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை" (51) என்பது திருக்குறள். சிறை-மதில், வாயில்கள் முதலாயின.

"நிறையான் மிகுகல்லா நேரிழை யாரைச்

சிறையான் அகப்படுத்தல் ஆகா - அறையோ!

வருந்த வலிதினின் யாப்பினும், நாய்வால்

திருந்துதல் என்றுமோ இல்"

என்பது பழமொழி (Christhumani, 2011). இல்லறப் பெண்கள் சிறை முதலிய காவல்களால் தம் கற்பினைக் காத்தல் முடியாது. தாமே உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும் என்பது கருத்து.

## முடிவுரை

இல்லறப் பெண்களுக்குச் சிறப்புத் தரும் 'நற்குணம்' வலியுறுத்தப்படுகிறது. எல்லாப் பண்புகளும் இதனுள் அடங்கும் எனக் கூறப்படுகிறது. இதில் சிறந்த பண்பாக 'நாணம்' எடுத்துரைக்கப்படுகின்றது. பெண்களின் நற்குண நற்செய்கைகளை விளக்கச் சிலப்பதிகாரம் மிகுதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கணவனின் குறிப்பறிந்து செயலாற்றும் இல்லறப் பெண் போற்றப்படுகிறாள். புதல்வரை வளர்த்தலில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள பொறுப்பு விளக்கப்படுகிறது. தாயருக்குள்ள தனிச்சிறப்புக் கூறப்பட்டுள்ளது. தந்தையின் கடமை தம் பிள்ளையை அறிவிற் சிறந்தவனாய் வளர்த்திட வேண்டும். அவ்வாறு செய்தல் பிள்ளைகள் தந்தையார்க்குத் தெய்வமாகத் தோன்றுவர். உற்ற நண்பர்கள் இல்லத்தில் தூய்மை மனத்தவர் தங்குதல் வேண்டா என வலியுறுத்தப்பட்டுள்ளது. தலைவனின் பரத்தையர் ஒழுக்கம் மறுத்துப் பேசப்படுகிறது. இல்லறப் பெண்கள் தம் வீட்டிலுள்ள வறுமை பெரியதாகினும் அதனை வெளிக்காட்டாது தோற்றப் பொலிவு திண்மையினை வலியுறுத்துகிறது பல்வேறு தலைப்புகளின்கீழ் அடக்கப்பெற்றுள்ள பாடல்கள் 4 முதல் 21 வரை நீண்டு செல்கின்றன. பெரும்பாலும் சீர்மையோடும் செம்மையோடும் செய்யப்பட்டிருந்தாலும் இல்வாழ்க்கை போன்ற பகுதிகளில் அமைந்த பாடல்கள் அனைத்தும் ஒரே மையத்தைக் கொண்டு இயங்கவில்லை என்பது தெளிவாகிறது.

## References


Bharathiyar, (2001) Kannamma En Kuzhanthai, Bharathiyar Padalkal, TU Veliyeedu, Thanjavur, India.

Christhumani, D. (2011) Pazhamozhi Naanoorin Amaippum Muraiyum, Ilakkiyangalil Marapum Puthumaiyum, Vol.11, 456-460.

Gowmareeshwari, S. (2003) Kathiraiverpillaiyin Tamilmozhi Akarathi, Saradha Pathippagam, Chennai, India.

Gowmareeshwari, S. (2009) Pathinenkilkanakku Noolkal Moolamum Uraiyum: Pazhamozhi Naanooru, Saradha Pathippagam, Chennai, India.

Manickavasagar (2019)Thirikadukam Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India.

Parimelazhakar (2015) Thirukkural Moolamum Uraiyum, Aruna Publications, Chennai, India.

Saminatha Iyer, U.Ve. (2017) Naanmanikadikai Moolamum Uraiyum, Uma Pathippagam, 7th edition, Chennai, India.

Subramaniyam, K. (2012) Thirukkural Moolamum Urayum, Poombukar Pathippagam, Chennai, India.

Uranadigal (1989) Thiruvarutpa (Muthal 5 Thirumuraigal), Samarasa Sanmaarkka Aaraaichi Nilaiyam, Vadalur, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License